இவ்வீழ்ச்சி 3.9 சதவீதமாகும். கூலிநிர்ணயச்சபை வர்த்தகங்களில் உள்ள தொழிலாளர்களுக்கான உண்மைக் கூலிகள் பெருந்தோட்டத்துறையின் கூலிஅதிகரிப்பின் காரணமாக 1.5 சதவீதத்தால் அதிகரித்தது. வேளாண்மைத்துறைத் தொழிலாளர்களுக்கு மட்டுமே உண்மைக் கூலி அதிகரிப்பு 7.6 சதவீதமாக அதிகரித்தது. கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றிலுள்ள தொழிலாளர்களினதும் பணிகளிலுள்ள தொழிலாளர்களினதும் உண்மைக் கூலிகள் 1984 இல் முறையே 11.6 சதவீதத்தாலும் 13.6 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

## வர்த்தகம்

பன்னாட்டுச் சந்தைகளில் தேயிலை விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம், சார்புரீதியில் இறப்பர் தெங்கு ஆகியவற்றின் சாதகமான விலைகள், கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஆகியவற்றின் பெருமளவு விளைவாக 1984 இல் நாட்டின் பன்னாட்டு வர்த்தகச் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்தது. சிஎஉ நியதிகளில் ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் 7 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக 1984 இல் 44 சதவீதத்தால் அதிகரித்தது.

இதே நேரம், 1983 இல் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 1984 இல் இறக்குமதிகளுக்கான கேள்வி சிறிதளவாக மாத்திரமே உயர்வானதாக (சிஎஉ நியதிகளில் 0.6 சதவீதம்) இருந்தது. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் முக்கியமாக வளமாக்கியின் மீதான உயர்ந்த செலவின் காரணமாக இடைநிலைப் பொருட்களின் அத்தகையபெறுமதி 5 சதவீதத்தால் உயர்வடைந்தது. முதலீட்டுப் பொருட்கள் மீதான மொத்த இறக்குமதி 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி 1983 இல் கப்பல், வான்கலங்களின் மீதான பெரும் செலவினைப் பிரதிபலித்தது. கப்பல்கள், வான்கலங்கள் தவிர்ந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 4 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தன.

அட்டவணை 1.29

**வர்த்தகநிலுவை 1982—1984**

பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்
(சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | இறக்குமதிகள் (அ) | | ஏற்றுமதிகள் (ஈ) | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சீராக்கப் பட்டது (இ) | சுங்கம் | சீராக்கப் பட்டது | சுங்கம் | சீராக்கப் பட்டது |
| 1982 ... | 36,876<br>(1,605) | 41,946<br>(1,826) | 21,124<br>(919) | 21,454<br>(934) | – 15,751<br>(–686) | – 20,492<br>(–892) |
| 1983 ... | 42,021<br>(1,670) | 45,558<br>(1,811) | 25,183<br>(1,001) | 25,096<br>(998) | – 16,838<br>(–669) | – 20,461<br>(–813) |
| 1984(ஆ) ... | 46,913<br>(1,799) | 47,541<br>(1,823) | 37,005<br>(1,419) | 37,347(இ)<br>(1,432) | – 9,908<br>(–380) | – 10,194<br>(–391) |

(அ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) சுங்க அறிக்கைகளில் பதிவு செய்யப்படாத கப்பல்கள், வான்கலங்கள் ஆகியவற்றின் பெறுமதிகளை உள்ளடக்குகிறது.
(ஈ) மீள ஏற்றுமதிகளை உள்ளடக்குகிறது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், உணவு ஆணையாளர் திணைக்களம், இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும் ஏனைய முக்கிய இறக்குமதியாளர்களும், அரச இரத்தினக் கல் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட ஏயர் லங்கா, இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.

துறைவகைப்படியான பகுப்பாய்வு மொத்த இறக்குமதிகளில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 1983 இல் 26 சதவீதத்திலிருந்து 1984 இல் 23 சத வீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் இடைநிலைப் பொருட்களின் பெறுமதி 48 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு அதிகரித்தமையைக் காட்டுகின்றது. முதலீட்டுப் பொருட்களின் பங்கும்கூட 27 சதவீதத்திலிருந்து 26 சதவீதத்திற்குச் சிறிதளவாக வீழ்ச்சியடைந்தது.

ஏற்றுமதிகளின் உயர்ந்த வளர்ச்சி வீதமும், இறக்குமதிகளில் ஏற்பட்ட மிகக் குறைந்த வளர்ச்சி வீதமும் 1984 இல் இலங்கையின் வர்த்தக நிலுவையில் மிகக் குறைந்த பற்றுக்குறையை ஏற்படுத்தின. சுங்கத் தரவுகளின்படி மொத்த இறக்குமதிகள் ரூ. 469,130 இலட்சமாகவும் (சிஎஉ 17,990 இலட்சம்) ஏற்றுமதி கள் ரூ. 370,050 இலட்சமாகவும் (சிஎஉ 14,190 இலட்சம்) விளங்கின. இது ரூ. 99,080 இலட்சம் (சிஎஉ 3,800 இலட்சம்) கொண்ட வர்த்தகப் பற்றுக்குறையை விளைவித்ததுடன் முன்னைய ஆண்டின் பற்றுக்குறையான ரூ. 168,380 இலட்சம் (சிஎஉ 6,690 இலட்சம்) கொண்ட பற்றுக்குறையிலும் பார்க்க சிஎஉ நியதிகளில் 43 சதவீதம் குறைவானதாக இருந்தது. காலங் கடந்தமை, பதிவு செய்தல் போன்ற ஏனைய காரணங்களுக்காகச் சீராக்கம் செய்யப்பட்டபொழுது மொத்த இறக்குமதிகள் ரூ. 475,410 இலட்சமாக (சிஎஉ 18,230 இலட்சம்) இருந்த வேளையில் மொத்த ஏற்றுமதிகள் ரூ. 373,470 இலட்சமாக (சிஎஉ 14,320 இலட்சம்) விளங்கியது. இதனுல், சீராக்கப்பட்ட வர்த்தகத் தரவுகள் 1983 இன் ரூ. 204,610 இலட்சத் (சிஎஉ 8,130 இலட்சம்) துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 101,940 இலட்சம் (சிஎஉ 3,910 இலட்சம்) கொண்ட வர்த்தகப் பற்றுக்குறையைக் காட்டின. இப்பற்றுக்குறை சிஎஉ நியதி களில் முன்னைய ஆண்டிலும் பார்க்க 52 சதவீதம் குறைவானதாகும்.

ஏற்றுமதி, இறக்குமதிகள் ஆகியவற்றினது விலைகள் தொடர்பான அசைவு கள் 1984 இல் இலங்கையின் வர்த்தகமாற்று விகிதத்தில் மேலும் முன்னேற் றத்தை ஏற்படுத்தியது. ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணினுல் அளவிடப்பட்டவாறு ஏற்றுமதி விலைகள் முன்னைய ஆண்டின் அதிகரிப்பான 39 சதவீதத்துடன் ஒப் பிடுகையில் 25 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் இறக்குமதி விலைச் சுட்டெண் ணினுல் அளவிடப்பட்டவாறு இறக்குமதி விலைகள் முன்னைய ஆண்டில் நிலவிய 21 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பிற்கு எதிராக 11 சதவீதத்தால் அதிகரித் தது. இச்சாதகமான விலைப்போக்குகள் இலங்கையின் வர்த்தகமாற்று விகிதத்தில் 14 சதவீதம் கொண்ட கணிசமான முன்னேற்றத்தை விளைவித்தது. இது 1983 இல் ஏற்பட்ட16 சதவீதம் கொண்ட முன்னேற்றத்தைத் தொடர்ந்து ஏற்பட்டதாகும்.

### அட்டவணை 1.30
### வெளிநாட்டு வர்த்தகம் 1975 – 1984

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | சுட்டெண்கள் 1978=100 | | | | வர்த்தக மாற்று வீதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலைகள் | | |
| | ஏற்றுமதிகள் (க. ஏ. பெ.) | இறக்குமதிகள் (கொ. கா. க.) | வர்த்தக நிலுவை | அனைத்து ஏற்றுமதிகள் | அனைத்து இறக்கு மதிகள் | அனைத்து ஏற்றுமதி மதிகள் | அனைத்து இறக்கு மதிகள் | |
| 1975 | 3,933 | 5,251 | – 1,318 | 107 | 52 | 29 | 49 | 58 |
| 1976 | 4,815 | 4,645 | + 170 | 102 | 57 | 34 | 44 | 78 |
| 1977 | 6,638 | 6,007 | + 631 | 94 | 73 | 55 | 54 | 102 |
| 1978 | 13,206 | 14,687 | – 1,481 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1979 | 15,273 | 22,560 | – 7,287 | 101 | 123 | 109 | 152 | 72 |
| 1980 | 17,595 | 33,942 | – 16,347 | 99 | 140 | 126 | 217 | 58 |
| 1981 | 21,043 | 36,582 | – 15,539 | 102 | 145 | 129 | 282 | 46 |
| 1982 | 21,454 | 41,946 | – 20,492 | 112 | 150 | 119 | 309 | 38 |
| 1983 | 25,096 | 45,558 | – 20,461 | 109 | 180 | 165 | 375 | 44 |
| 1984(அ) | 37,347 | 47,541 | – 10,194 | 127 | 185 | 207 | 415 | 50 |

(அ) தற்காலிகமானவை.
1980 ஆம் ஆண்டிலிருந்து திருத்தியமைக்கப்பட்டவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

**ஏற்றுமதிகள்**

ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (சீராக்கப்பட்ட தரவு) 1983 இல் ரூ. 250,960 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 9,980 இலட்சம்) 1984 இல் ரூ. 373,470 இலட்சங்களுக்கு (சிஎஉ 14,320 இலட்சம்) அதிகரித்தன. இதனுல் ஏற்றுமதிகள் ரூபா நியதிகளில் 49 சதவீதத்தினுலும், சிஎஉ நியதிகளில் 44 சத வீதத்தினுலும் அதிகரித்தன. 1983 இல் இவை முறையே 17 சதவீதமாகவும், 7 சதவீதமாகவும் விளங்கின. சிறு வேளாண்மைப் பயிர்கள், இரத்தினக் கற்கள் தவிர்ந்த அனைத்து ஏற்றுமதி வகைகளிலும் அதிகரிப்புக் காணப்பட்டது. இவ் வதிகரிப்பின் மீது பெருந்தோட்டப் பயிர்கள், கைத்தொழில் ஏற்றுமதிகள் ஆகிய வற்றின் செயலாற்றம் முக்கிய செல்வாக்கினைச் செலுத்தியதுடன் இவை 1983 ஆம் ஆண்டிலும் பார்க்க முறையே 62 சதவீதத்தினுலும் (சிஎஉ நியதிகளில் 56 சதவீதம்) 43 சதவீதத்தினுலும் (சிஎஉ நியதிகளில் 38 சதவீதம்) உயர் வடைந்தன. பெருந்தோட்டப் பயிர்களிலிருந்தான அதிகரித்த வருவாய்களின் விளைவாக மொத்த ஏற்றுமதி வருவாய்களில் வேளாண்மை ஏற்றுமதிகளின் பங்கு 1983 இன் 58 சதவீதத்திலிருந்து 1984 இல் 60 சதவீதத்திற்கு அதிகரித்தது. சிறு வேளாண்மைப் பயிர்களிலிருந்தான வருவாய்களில் வீழ்ச்சி காணப்பட்ட போதும் இது ஏற்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான உண்மையான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தபோதும் கைத்தொழில் ஏற்றுமதி களின் பங்கு 1983 இன் 35 சதவீதத்திலிருந்து 1984 இல் 34 சதவீத த்திற்கு வீழ்ச்சியடைந்தது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சி பெருந்தோட்டப் பயிர்களிலிருந்தான அதிகரித்த வருவாய்களின் முழுமையான தொரு பிரதிபலிப்பாகும். இரத்தினக்கல் ஏற்றுமதிகளிலிருந்தான குறைவடைந்த வருவாய்கள் முழுமையான, தொடர்பான நியதிகள் இரண்டிலும் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் வீழ்ச்சியை விளைவித்தன.

மூன்று முக்கிய பெருந்தோட்டப் பயிர்களினதும் ஏற்றுமதிச் செயலாற்றம் 1984 இல் மிகவும் வரவேற்கத்தக்கதாக இருந்தது. தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றிலிருந்தான வருவாய்கள் முன்னைய ஆண்டினைவிட முறையே 90 சத வீதத்தினுலும் (சிஎஉ நியதிகளில் 83 சதவீதம்) 16 சதவீதத்தினுலும் (சிஎஉ நியதிகளில் 12 சதவீதம்) 10 சதவீதத்தினுலும் (சிஎஉ நியதிகளில் 6 சதவீதம்) அதிகரித்தன. இதன் விளைவாக அவற்றின் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு 1983 இல் 52 சதவீதத்திலிருந்து 1984 இல் 57 சதவீதத் திற்கு உயர்வடைந்தது. மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் 42 சதவீதத்திற்குத் தனித்து வகை கூறிய தேயிலை ஏற்றுமதிகள் ஒப்பிடுகையில் 1983 இல் 33 சத வீதமாக இருந்தது. எனினும், சிறு வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் ஏமாற்றமளிப்பதாக இருந்தது. 1983 இல் ரூபா நியதிகள், சிஎஉ நியதிகள் இரண்டிலும் வீழ்ச்சியடைந்திருந்த இவ்வேற்றுமதிகள் 1984 இலும் அதேபோன்று மேலும் வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

1984 இல் கைத்தொழில் ஏற்றுமதிகளில் பெரும் விரிவாக்கமொன்று காணப் பட்டது. இவ்வகையில் பெரும் விடயமான புடவையும், ஆடைகளிலுமிருந்தான வருவாய்கள் 1983 இன் 35 சதவீதத்துடன் (சிஎஉ நியதிகளில் 24 சதவீதம்) ஒப்பிடுகையில் 1984 இல் 59 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 54 சதவீதம்) அதிகரித்தன. அதே நேரம், 1983 இல் வீழ்ச்சியடைந்த பெற்ருேலியம், ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் இரண்டிலுமிருந்தான வருவாய்கள் 1984 இல் முறையே 23 சதவீதத்தினுலும் (சிஎஉ நியதிகளில் 18 சதவீதம்) 26 சதவீதத் தினுலும் (சிஎஉ நியதிகளில் 21 சதவீதம், குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன.

இதன் விளைவாக சிஎஉ நியதிகளில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் முன்னைய ஆண்டின் 3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 38 சதவீதத்தால் உயர்வடைந்தன.

கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 1983 இன் ரூ. 11,320 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 450 இலட்சம்) 1984 இல் ரூ. 8,320 இலட்சங்களுக்கு (சிஎஉ 320 இலட்சம்) 27 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 29 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இதற்கு இரத்தினக்கல் ஏற்றுமதிகள் 1983 இல் ரூ. 9,400 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 370 இலட்சம் 1984 இல் ரூ. 6,170 இலட்சங்களுக்கு (சிஎஉ 240 இலட்சம்) வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். எனினும் இவ்வீழ்ச்சியின் ஒரு பகுதி 1983 இல் ரூ. 1,920 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 80 இலட்சம்) 1984 இல் ரூ. 2,150 இலட்சங்களுக்கு (சிஎஉ 80 இலட்சம்) உயர்ந்த ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளினுல் எதிரீடு செய்யப்பட்டது.

தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 1984 இல் ரூ. 157,640 இலட்சங்களாக (சிஎஉ 6,040 இலட்சம்) விளங்கி 1983 இனைவிட ரூ. 74,690 இலட்சம் (சிஎஉ 2,750 இலட்சம்) கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. 1983 இன் நடுப்பகுதியில் தொடங்கிய தேயிலையின் பன்னுட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குக் காரணமாக இருந்த குறிப்பாக தேயிலை உற்பத்தி நாடுகளின் குறைந்த ஏற்றுமதிக் கிடைப்பனவு அதிகரித்த நுகர்வு ஆகியன 1984 இலும் தொடர்ந்தன. ஒரு கிலோகிறும் தேயிலைக்கான சராசரிகஏபெ விலை1983இன் ரூ.52.52 இலிருந்து (சிஎஉ 2.09) 1984 இல் ரூ. 77.20 இற்கு (சிஎஉ 2.96) 47 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 42 சதவீதம்) அதிகரித்தது. இதே நேரத்தில் கொழும்பு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட அனைத்து தேயிலைகளினதும் சராசரி மொத்த விலை கிலோகிறுமொன்றிற்கு ரூ.43.27 இலிருந்து கிலோகிறுமொன்றிற்கு ரூ.62.79 இற்கு 45 சதவீதத்தினுல் அதிகரித்தது. இது இலண்டன் ஏலங்களில் இலங்கையின் தேயிலைகள் 1983 இல் கிலோகிறுமொன்றிற்கு 153.40 பென்சுகளிலிருந்து 1984 இல் 247.41 பென்சுகளுக்கு உயர்ந்த 61 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கதாகும்.

கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்ட தேயிலையின் அளவு 1983 இல் 1,670 இலட்சம் கிலோகிறும்களிலிருந்து 1984 இல் 2,030 இலட்சம் கிலோகிறும்களுக்கு 22 சதவீதத்தினுல் அதிகரித்தது. இலண்டன் சந்தையில் விற்பனைக்கு விடப்பட்ட இலங்கைத் தேயிலையின் அளவும் 16 இலட்சம்கிலோகிறும்களிலிருந்து 26 இலட்சம் கிலோகிறும்களுக்கு உயர்வடைந்தது. 1984 இல் தேயிலையின் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட ஏற்றுமதிகளின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு மாறுன ஒன்றுக இருந்தது. இவ்வாறிருந்தாலுங்கூட, இது 1975 இல் ஏற்றுமதி செய்யப்பட்ட 2,130 இலட்சம் கிலோகிறும்கள் கொண்ட உச்ச அளவிலும் பார்க்கக் குறைவானதாக விளங்கியது.

இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி 1983 இன் ரூ. 28,520 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,140 இலட்சம்) 1984 இல் ரூ. 33,010 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,270 இலட்சம்) 16 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 12 சதவீதம்) உயர்வடைந்தது. இதற்குச் சராசரி கஏபெவிலை 1983 இல் கிலோகிறுமொன்றிற்கு ரூ. 22.77 இலிருந்து 1984 இல் ரூ. 26.16 இற்கு உயர்வடைந்தமையே முக்கிய க ாரணமாகும். இறப்பர் ஏற்றுமதிகளின் அளவு 10 இலட்சம் கிலோகிறும்களால் 1984 இல் 1,260 இலட்சம் கிலோக்களுக்கு அதிகரித்தது.

## அட்டவணை 1.31

### ஏற்றுமதிகளின் அமைப்பு 1982 — 1984

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1983 | 1984(ஈ) | 1982 | 1983 | 1984 | 1982 | 1983 | 1984 |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் .. | 11,656 | 14,554 | 22,542 | 507 | 579 | 864 | 54.3 | 58.0 | 60.3 |
| 1.1 தேயிலை .. | 6,342 | 8,295 | 15,764 | 276 | 330 | 604 | 29.6 | 33.1 | 42.2 |
| 1.2 இறப்பர் .. | 2,323 | 2,852 | 3,301 | 101 | 114 | 127 | 10.8 | 11.4 | 8.8 |
| 1.3 தெங்கு .. | 1,496 | 1,921 | 2,118 | 65 | 76 | 81 | 7.0 | 7.6 | 5.7 |
| 1.3.1 உள்ளீட்டுஉற்பத்திகள் .. | 1,003 | 1,409 | 1,553 | 44 | 56 | 59 | 4.7 | 5.6 | 4.2 |
| 1.3.2 ஏனையவை .. | 494 | 512 | 565 | 21 | 20 | 22 | 2.3 | 2.0 | 1.5 |
| 1.4 சிறு வேளாண்மை உற்பத்திகள் (அ) .. | 1,495 | 1,486 | 1,358 | 65 | 59 | 52 | 6.9 | 5.9 | 3.6 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (அ) (ஆ) .. | 8,271 | 8,821 | 12,591 | 360 | 351 | 483 | 38.6 | 35.1 | 33.7 |
| 2.1 புடவையும் ஆடைகளும் .. | 3,502 | 4,738 | 7,535 | 152 | 188 | 289 | 16.3 | 18.9 | 20.2 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் .. | 3,280 | 2,682 | 3,288 | 143 | 107 | 126 | 15.3 | 10.6 | 8.8 |
| 2.3 ஏனையவை ... | 1,489 | 1,401 | 1,768 | 65 | 56 | 68 | 7.0 | 5.6 | 4.7 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் ... | 859 | 1,132 | 832 | 37 | 45 | 32 | 4.0 | 4.5 | 2.2 |
| 3.1 இரத்தினக் கற்கள் ... | 685 | 940 | 617 | 30 | 37 | 24 | 3.2 | 3.7 | 1.6 |
| 3.2 ஏனையவை ... | 174 | 192 | 215 | 7 | 8 | 8 | 0.8 | 0.8 | 0.6 |
| 4. பகுக்கப்படாதவைகள் (இ) ... | 668 | 589 | 1,382(உ) | 30 | 23 | 53 | 3.1 | 2.4 | 3.7 |
| மொத்த ஏற்றுமதிகள் (ஆ) ... | 21,454 | 25,096 | 37,347 | 934 | 998 | 1,432 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) கூடியளவு அடக்கத்தை பெறும்பொருட்டு தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.
(ஆ) சீராக்கப்பட்டவை.
(இ) மீள் ஏற்றுமதிகள் உட்பட.
(ஈ) தற்காலிகமானவை.
(உ) வான்கலன் ஒன்றின் ஏற்றுமதி நீங்கலாக.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

மாற்றல்— 1982 — 1 சிஎஉ = ரூ. 22.98
1983 — 1 சிஎஉ = ரூ. 25.16
1984 — 1 சிஎஉ = ரூ. 26.08

அனைத்து தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1984 இல் ரூ. 21,180 இலட்சங்களுக்கு (சிஎஉ 810 இலட்சம்) 10 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 6 சதவீதம்) அதிகரித்தது. உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிகள் 1983 இன் ரூ. 14,090 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 560 இலட்சம்) 1984 இல் ரூ. 15,530 இலட்சங்களுக்கு (சிஎஉ 590 இலட்சம்) அதிகரித்த வேளையில் துணை உற்பத்திகளின் ஏற்றுமதிகள் ரூ. 5,120 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 200 இலட்சம்) ரூ. 5,660 இலட்சங்களுக்கு (சிஎஉ 220 இலட்சம்) உயர்வடைந்தது. எனினும் உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதி அளவு 1983 இன் 5,820 இலட்சம் காய்களிலிருந்து 1984 இல் 3,270 இலட்சம் காய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதனால் உள்ளீட்டு உற்பத்திகளிலிருந்தான வருவாய்களின் உயர்வு முழுவதும் 1983 இல் காயொன்றிற்கு கஏபெ விலை ரூ. 2.42 இலிருந்து 1984 இல் ரூ. 4.75 இற்கு அதிகரித்தமையே காரணமாக இருந்தது.

வேளாண்மை ஏற்றுமதிச் செயலாற்றத்தில் காணப்பட்ட ஒரே பின்னடைவு யாதெனில் சிறு வேளாண்மைப் பயிர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சி முன்னைய ஆண்டின் 10 சதவீதம் கொண்ட வீழ்ச்சியினைத் தொடர்ந்து சிஎஉ நியதிகளில் மேலும் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையேயாகும். இவ்வீழ்ச்சி முக்கியமாகக் கராம்பு, மரக்கறிகள், எள்ளு விதைகள், முந்திரிப் பருப்பு, இன்றியமையாத எண்ணெய்கள் ஆகியவற்றின் குறைந்த வருவாய்களினால் ஏற்பட்டதாகும்.

கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1983 இன் ரூ. 88,210 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் (சிஎஉ 3,510 இலட்சம்) 1984 இல் ரூ. 125,910 இலட்சங்களாக விளங்கி 43 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. (சிஎஉ நியதிகளில் 38 சதவீதம்) புடவை மற்றும் ஆடைகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ. 47,380 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,880 இலட்சம்) ரூ. 75,350 இலட்சங்களுக்கு (சிஎஉ 2,890 இலட்சம்) உயர்ந்ததுடன் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் இவ்விரண்டு ஆண்டுகளுக்குமிடையில் ரூ. 26,820 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,070 இலட்சம்) ரூ. 32,880 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,260 இலட்சம்) உயர்வடைந்தன.

விலைகள், அளவு இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாக ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. மொத்த ஏற்றுமதிகளில் ஆடை ஏற்றுமதிகளின் பங்கு 1983 இன் 19 சதவீதத்திலிருந்து 1984 இல் 20 சதவீதத்திற்கு மேலும் உயர்வடைந்தது. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் முயற்சிகளினது ஆடை ஏற்றுமதிகள் 1984 இல் ரூ. 26,870 இலட்சங்கள் (சிஎஉ 1,030 இலட்சம்) என மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

பொதுவாகப் பார்க்கையில் ஏற்றுமதித் துறையின் வளர்ச்சி அண்மைய ஆண்டுகளில் மிக உயர்ந்ததொன்றாக விளங்கியது. எனினும் முன்னைய ஆண்டறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு சிறு வேளாண்மை ஏற்றுமதிகளின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு ஆழ்ந்த கவனத்திற்குரிய ஒரு விடயமாகவே இருக்கின்றது. இரத்தினக்கல் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சிக்கும் இது பொருந்தத்தக்கதாகும்.

**இறக்குமதிகள்**

இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு (சீராக்கப்பட்ட தரவு) 1983 இன் ரூ. 455,580 இலட்சங்களுடன் (சிஎஉ 18,11 இலட்சம்) 1984 இல் ரூ. 475,410 இலட்சங்களாக (சிஎஉ 18,230 இலட்சம்) விளங்கியது. இதனுல் ரூபா நியதிகளில் இறக்குமதிகள் முன்னைய ஆண்டின் 9 சதவீத அதிகரிப்புக்கு எதிராக 4 சத வீதத்தால் அதிகரித்தன. எனினும் சிஎஉ நியதிகளில் 1983 இன் 1 சதவீதங் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.6 சதவீதம் கொண்ட சிறிதளவான அதிகரிப்பைக் காட்டியது. இறக்குமதிகளில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு முழுவதும் இடைநிலைப் பொருட்களிலிருந்து மட்டுமே ஏற்பட்டதாகும்.

இறக்குமதிகளின் அமைப்பியல் உள்ளமைப்பு முன்னைய ஆண்டினைவிடக் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் காட்டியது. இடைநிலைப் பொருட்களின் பங்கு 1983 இல் 48 சதவீதத்திலிருந்து 1984 இல் 50 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் இவ்விரண்டு ஆண்டுகட்குமிடையில் நுகர்வு மற்றும் முதலீட்டுப்பொருட் களின் பங்குகள் முறையே 26 சதவீதத்திலிருந்து 23 சதவீதத்திற்கும், 27 சத வீதத்திலிருந்து 26 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. நுகர்வுப் பொருட்களின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு அரிசி, சீனி, பாலுணவுகள், மற்றும் ஏனைய நீண்டகால நுகர்வுப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியே பெருமளவு காரணமாகும்.

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 1984 இல் ரூ. 121,700 இலட்சங்களாக (சிஎஉ 4,670 இலட்சம்) விளங்கி ரூபாய் நியதி களில் 1983 இனைவிட ஏறத்தாழ 1 சதவீதமானதொரு அதிகரிப்பைக் காட்டிய தெனினும் சிஎஉ நியதிகளில் 3 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. எனினும், கப்பல்கள், வான்கலங்களின் இறக்குமதிகளை நீக்கும்பொழுது முதலீட்டுப் பொருட் களின் பெறுமதி முன்னைய ஆண்டினைவிட 7 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 4 சதவீதம்) அதிகரித்துள்ளமை புலனுகின்றது. கட்டிடப் பொருட்கள், போக்கு வரத்துக் கருவிகள் என்பவற்றின் மீதான இறக்குமதிச் செலவுகள் முறையே 38 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 40 சதவீதம்) 21 சதவீதத்தினுலும் (சிஎஉ நியதிகளில் 24 சதவீதம்) குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தவேளையில் பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் இறக்குமதிகள் ரூபாய் நியதிகளில் 1 சத வீதத்தால் சிறிதளவாக அதிகரித்தன. ஏனைய முதலீட்டுப் பொருட்களின் இறக்கு மதி 1983 இன் ரூ. 18,130 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 720 இலட்சம்) 1984 இல் ரூ. 30,770 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,180 இலட்சம்) 70 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 64 சதவீதம்) குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. போக்கு வரத்துக் கருவிகளின் இறக்குமதி 21 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. இறக்கு மதி வகையில் விரிவினை ஏற்படுத்தியிருக்கும் வான்கலங்களின் பெறுமதி ரூ. 9,310 இலட்சங்களாக (சிஎஉ 360 இலட்சம்) விளங்கியபோதும் இவ்வீழ்ச்சியேற்பட்டது.

இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 1983 இன் ரூ. 217,270 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 8,640 இலட்சம்) 1984 இல் ரூ. 239,250 இலட்சங்களுக்கு (சிஎஉ 9,170 இலட்சம்) 10 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 6 சதவீதம்) அதிகரித்தது. கோதுமைத் தானியத்தின் மீதான இறக்குமதிச் செலவு ரூ. 24,710 இலட்சங்களாக (சிஎஉ 950 இலட்சம்) விளங்கி 6 சதவீதம் கொண்ட (சிஎஉ நியதிகளில் 2 சதவீதம்) அதிகரிப்பைக் காட்டிய வேளையில் வளமாக்கி, இரசாயனங்கள் மீதான இறக்குமதிச் செலவுகள் முறையே ரூ. 11,030 இலட்சங்களாகவும் (சிஎஉ 420 இலட்சம்) ரூ. 10,280 இலட்சங்

அட்டவணை 1.32

## இறக்குமதிகளில் முடிவுப் பயன்பாட்டு பகுப்பு

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சிஎஉ பத்து இலட்சம் | | | மொத்த சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1983(அ) | 1984(ஆ) | 1982 | 1983 | 1984 | 1982 | 1983 | 1984 |
| 1. நுகர்வுப் பொருட்கள் ... | 8,616 | 11,639 | 11,052 | 375.0 | 462.7 | 423.8 | 20.5 | 25.5 | 23.2 |
| 1.1 உணவும் குடிபானமும் ... | 3,561 | 5,375 | 4,986 | 155.0 | 213.7 | 191.2 | 8.5 | 11.8 | 10.5 |
| 1.1.1 அரிசி ... | 925 | 765 | 197 | 40.3 | 30.4 | 7.5 | 2.2 | 1.7 | 0.4 |
| 1.1.2 மா ... | 62 | 108 | 28 | 2.7 | 4.3 | 1.1 | 0.2 | 0.2 | 0.1 |
| 1.1.3 சீனி ... | 970 | 1,985 | 1,346 | 42.2 | 78.9 | 51.6 | 2.3 | 4.4 | 2.8 |
| 1.2 புடவையும் துணிகளும் ... | 2,167 | 2,724 | 2,974 | 94.3 | 108.3 | 114.0 | 5.2 | 6.0 | 6.3 |
| 1.3 ஏனையவை ... | 2,888 | 3,540 | 3,092 | 125.7 | 140.7 | 118.6 | 6.9 | 7.8 | 6.5 |
| 2. இடைநிலைப் பொருட்கள் | 21,640 | 21,727 | 23,749 | 941.8 | 863.7 | 910.7 | 51.6 | 47.7 | 50.0 |
| 2.1 பெற்றோலியம் ... | 12,274 | 11,024 | 10,681 | 534.2 | 438.2 | 409.6 | 29.3 | 24.2 | 22.5 |
| 2.2 வளமாக்கி ... | 560 | 625 | 1,103 | 24.4 | 24.8 | 42.3 | 1.3 | 1.4 | 2.3 |
| 2.3 இரசாயனம் ... | 729 | 832 | 1,028 | 31.7 | 33.1 | 39.4 | 1.7 | 1.8 | 2.2 |
| 2.4 கோதுமை ... | 1,787 | 2,340 | 2,471 | 77.8 | 93.0 | 94.8 | 4.3 | 5.1 | 5.2 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... | 11,591 | 12,077 | 12,170 | 504.5 | 480.1 | 466.7 | 27.6 | 26.5 | 25.6 |
| 3.1 பொறியும் கருவியும் ... | 3,964 | 5,261 | 5,335 | 172.5 | 209.1 | 204.6 | 9.5 | 11.6 | 11.2 |
| 3.2 போக்குவரத்துக் கருவி (இ) ... | 5,529 | 3,826 | 3,031 | 240.6 | 152.1 | 116.2 | 13.2 | 8.4 | 6.4 |
| 3.3 கட்டடப் பொருட்கள் ... | 557 | 1,177 | 727 | 24.2 | 46.8 | 27.9 | 1.3 | 2.6 | 1.5 |
| 4. பகுக்கப்படாதவை ... | 99 | 115 | 570 | 4.3 | 4.6 | 21.8 | 0.2 | 0.3 | 1.2 |
| மொத்த இறக்குமதிகள் (ஈ) ... | 41,946 | 45,558 | 47,541 | 1,825.6 | 1,811.1 | 1,823.0 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) திருத்தப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) சுங்கக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிராத வான்கலங்கள், கப்பல்களின் பெறுமதியை உள்ளடக்குகிறது.
(ஈ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்,
முதன்மை இறக்குமதியாளர்களும்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
வரையறுக்கப்பட்ட எயர் லங்கா
இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.

களாகவும் (சிஎஉ 390 இலட்சம்) அமைந்து முன்னைய ஆண்டிலும் பார்க்க 76 சதவீதத்தினுலும் (சிஎஉ நியதிகளில் 71 சதவீதம்) 24 சதவீதத்தினுலும் (சிஎஉ நியதிகளில் 19 சதவீதம்) உயர்வடைந்தன. கோதுமை இறக்குமதியின் அதிகரித்த பெறுமதி முழுவதும் சராசரி கொ. க. விலையில் ஏற்பட்ட உயர்ச்சியின் விளைவாக ஏற்பட்டது.

முன்னைய ஆண்டில் 10 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 18 சதவீதம்) வீழ்ச்சியடைந்த பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதி 1983 இன் ரூ. 110,240 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 4,380 இலட்சம்) 1984 இல் ரூ. 106,810 இலட்சங்களுக்கு (சிஎஉ 4,100 இலட்சம்) மேலும் 3 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 7 சதவீதம்) வீழ்ச்சியுற்றது. இதன் விளைவாக மொத்த இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியில் பெற்றோலிய இறக்குமதிகளின் பங்கு இவ்விரண்டு ஆண்டுகளுக்குமிடையில் 51 சதவீதத்திலிருந்து 45 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பெற்றோலிய இறக்குமதிகள் மீதான குறைந்த செலவினத்திற்குக் குறைந்த விலைகளும் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் குறைந்த இறக்குமதியுமே காரணமாகும்.

1983 இல் 35 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 23 சதவீதம்) அதிகரித்த நுகர்வுப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் ரூ. 116,390 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4,630 இலட்சம்) 1984 இல் ரூ. 110,520 இலட்சங்களுக்கு (சிஎஉ 4,240 இலட்சம்) 5 சதவீதத்தினுல் (சிஎஉ நியதிகளில் 8 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு வானெலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளடங்கிய உணவும் குடிபானமும் (அரிசி, சீனி, பால் உற்பத்திகள்) ஏனைய நுகர்வுப் பொருட்கள் மீதான குறைந்த செலவினமே முக்கிய காரணமாகும். அளவு, விலை இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளின் காரணமாகச் சீனி இறக்குமதிகளின் மீதான செலவினம் 1983 இல் ரூ. 19,850 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 790 இலட்சம்) 1984 இல் ரூ. 13,460 இலட்சங்களுக்கு (சிஎஉ 520 இலட்சம்) 33 சதவீதத்தினுல் மிகக் கூடியளவில் (சிஎஉ நியதிகளில் 35 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. எனினும் புடவைகள், ஆடைகளினது இறக்குமதிப் பெறுமதி 1983 இல் ரூ. 27,240 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 1,080 இலட்சம்) 1984 இல் ரூ. 29,740 இலட்சங்களுக்கு (சிஎஉ 1,140 இலட்சம்) 9 சதவீதத்தால் (சிஎஉ நியதிகளில் 5 சதவீதம்) உயர்வடைந்தது. இது ஆடைக் கைத்தொழில்களின் பயன்பாட்டிற்காக அதிகரித்த இறக்குமதிகளைப் பிரதிபலித்தது.

அட்டவணை 1.33

**முக்கிய இறக்குமதிகளின் அளவு 1984**

மெற்றிக் தொன்கள்

| மாதம் | அரிசி | கோதுமை | சீனி | பெற்றோலியம் (மசகு எண்ணெய்) | வளமாக்கி |
|---|---|---|---|---|---|
| சனவரி ... | 14,123 | 60,763 | 4,162 | 126,221 | 40,211 |
| பெப்புருவரி ... | 4 | — | 10,841 | 155,734 | 5,700 |
| மாச்சு ... | 12,405 | 63,600 | 27,600 | 158.038 | 32,134 |
| எப்பிறல் ... | 15 | 61,341 | 16,430 | 157,544 | 25,423 |
| மே ... | 8,036 | 85,826 | 17,500 | 63,196 | 43,123 |
| யூன் ... | 3,602 | 53,486 | 17,700 | 156,981 | — |
| யூலை ... | 59 | 30,000 | 11,500 | 188,424 | 37,300 |
| ஓகத்து ... | 69 | 55,730 | 37,070 | 157,451 | 41,462 |
| செத்தெம்பர் ... | 35 | 56,000 | 60,026 | 31,450 | 36,037 |
| ஒத்தோபர் ... | 46 | — | 23,235 | 315,504 | 33,280 |
| நவெம்பர் ... | 19 | 60,000 | 10,003 | 159,086 | 11,180 |
| திசெம்பர் ... | 35 | 44,444 | 27,300 | 63,928 | 26,875 |
| மொத்தம் (அ) (ஆ) ... | 38,448 | 571,190 | 263,367 | 1,733,557 | 327,625 |

(அ) சீராக்கப்பட்டது,
(ஆ) பிற்பட்ட சுங்கச் சீராக்கங்களின் காரணமாக மாதாந்த தரவுகள் ஆண்டு மொத்தத்திற்கு சேர்க்கப்படுவதில்லை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

கொடுப்பனவு மாதிரிகளின்படி சுங்கப் பகுதியினுல் இறக்குமதிகள் வகைப் படுத்தப்படாமையினுல் உதவி இறக்குமதிகளுக்கெனத் தனியான பதிவு கிடைக்க வில்லை. எனினும் வெளிநாட்டுதவி பகிர்ந்தளிப்புக்களின்மீது கிடைக்கத்தக்க தரவு களின் அடிப்படையில் உதவி இறக்குமதிகளை மேலெழுந்தவாரியாக மதிப்பிட முடிகின்றது. இவ்வடிப்படையில் 1984 ஆம் ஆண்டிற்கான உதவி இறக்குமதிகள் 1983 ஆம் ஆண்டின் ரூ. 95,590 இலட்சத்துடன் (சிஎஉ 3,790 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 103,190 இலட்சங்களென (சிஎஉ 3,960 இலட்சம்) மதிப்பிடப் பட்டிருக்கின்றது. இதனுல் மொத்த இறக்குமதிகளில் உதவி இறக்குமதியின் பங்கு 1983 இன் 21 சதவீதத்திலிருந்து 1984 இல் 22 சதவீதத்திற்கு அதிகரித் தது.

## வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் 1984 இல் காணப்படாததுடன் 1977 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை நெறிமுறைகள் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தன. ஆகவே பெரும்பாலான இறக்குமதிகள் கட்டுப்பாடற்றமுறையில் இருந்தவேளையில் மரபுவழி மற்றும் மரபுவழியற்ற இரண்டு ஏற்றுமதிகளினதும் விரிவாக்கம் வலியுறுத்தப்பட்டது. ஏற்றுமதிகளில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பு, இறக்குமதி வளர்ச்சியில் ஏற் பட்ட குறைவு ஆகியன இக்கொள்கைகளின் வெற்றிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இறக்குமதிகளைப் பொறுத்தவரையில் இன்றியமையாதனவல் லாத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதனையே நோக்கமாகக் கொண்டிருந்த நாணயக் கொள்கைகள் குறிப்பாகத் தாக்கம் மிக்கனவாக இருந்தனவென்பதில் சிறிதளவும் ஐயமில்லை. ஏற்றுமதித் துறையின் முழுமையான செயலாற்றம் ஊக்குவிக்கப்படுகின்ற வேளையில் வேளாண்மை ஏற்றுமதி தவிர்ந்த ஏற்றுமதிகளைத் தாக்கம் மிக்கதாக்கும் விதத்தில் 1984 இன் ஏற்றுமதிகளின் அமைப்பில் சில மாற்றங்களும் காணப்பட்டன. இதனுல் புடவையும் ஆடைகளும் மற்றும் ஏனைய கைத்தொழில் பொருள்கள் ஆகிய இரண்டினதும் ஏற்றுமதிகள் பெருமளவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. எனினும் ஏற்றுமதித்துறையில் சில வேளா ண்மை ஏற்றுமதிகள் இரத்தினக் கற்கள் போன்ற உள்ளார்ந்த வள வளர்ச்சியைக் கொண்ட சில தொகுதிகள் மந்த நிலையில் இருந்தன. எனவே இத்துறைகளை மீண்டும் புத்தாக்குவதற்கு உடனடியான கொள்கை முயற்சிகளை மேற்கொள்வது அவசியமானது என்பதனைக் காட்டுகின்றது.

தாராளமாக்கப்பட்ட அமைப்பின்கீழ் இன்றியமையாத நுகர்வு, முதலீடு ஆகியவற்றிற்கான பொருட்கள், பணிகளின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதே இறக்குமதிக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும். இடைநிலைப் பொருட்களின் பங்கில் ஏற்பட்ட அதிகரிப்பும் நுகர்வுப் பொருட்களின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சி யும் கொள்கைகள் மூல வளங்கள் திருந்திய முறையில் ஒதுக்கப்படுவதற்குத் துணை நின்றமையை எடுத்துக் காட்டின.

இலக்கிடப்பட்ட உண்மையான வளர்ச்சியையும் விலை உறுதியையும் அடை வதற்குப் போதுமான மட்டத்தில் முன்னுரிமைத்துறைகளுக்குக் கிடைக்கத்தக்க நிதிகளை வழிப்படுத்தியதன்மூலம் நாணயக்கொள்கை வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைக்கு உதவியது. ஏற்றுமதி வர்த்தகத்தைப் பாதித்த நாணயக்கொள்கை வழிமுறைகளின் விபரங்கள் இவ்வறிக்கையில் பணமும் வங்கித்தொழிலும் என்ற பிரிவில் தரப்பட்டுள்ளன.

ஏற்றுமதிகளை விரிவாக்கல் அதன் அமைப்பினை மாற்றுதல் ஆகிய நோக்கத் துடன் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை ஏற்றுமதி ஊக்குவிப்பினை நடை முறைப்படுத்தும் முன்னணி அமைப்பாக ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குகின்ற அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அமைச் சர்களைக் கொண்ட ஏற்றுமதி அபிவிருத்திக் கழகத்தின் வழிகாட்டலின் கீழ் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் அபிவிருத்திச்சபை ஏற்றுமதிகள் தொடர்பான கொள்கைகளை வடிவமைக்கவும் நடைமுறைப்படுத்தவும் பொறுப்பாகவிருந்தது. தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலைக் கூடியள விற்குத் தாக்கம் மிக்கதாக்கும் பொருட்டு இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் அபிவிருத்திச் சபை துறைவகைப்படியான ஆறு சிறப்புப் பணிகளை உருவாக்கியது. இத்துறை வகைப்படியான சிறப்புப் பணிகளின் வேலைகளை இணைக்கும் பொருட்டு மதியுரைக் குழுவொன்று அமைக்கப்பட்டது. சபை ஏற்றுமதித்துறைக்கான வரி ஊக்குவிப்புக்களுடன் தொடர்பான பல விதந்துரைப்புக்களைச் செய்ததுடன் இவ் விதந்துரைப்புக்கள் 1984 இன் ஏப்பிறல் மாதத்தின் உள்நாட்டிறைவரித் திருத்தச் சட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டன. செலாவணி வீத மாற்றங்களினால் பாதிக்கப் பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி அபிவிருத்தி நன்கொடைத் திட்டத்திற் கூடாக நிவாரணங்களை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சபை சலுகை நியதிகளில் நடுத்தர, நீண்டகால நிதியினைப் பெறுவதில் ஏற்றுமதி யாளர்களுக்குத் தொடர்ந்தும் உதவியது.

ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்களில் கிராம மட்டத்தில் ஏற்றுமதிக்கான உற்பத்தி 1984 இலும் தொடர்ந்தது. இந்தக் கிராமங்களில் கிராமிய உற்பத்தி யாளர்கள் பயிற்சியளிக்கப்பட்டதுடன் பொருட்கள் வழங்கலில் குறிப்பாக ஏற்று மதிக்கான உயர்ந்த உள்நாட்டு கூட்டப்பட்ட பெறுமதியுடைய பொருட்களை வழங்கல் அமைப்பும் ஏற்படுத்தப்பட்டது. 1984 இல் எல்லாமாக 13 ஏற்றுமதி உற்பத்திக் கிராமக் கூட்டு நிலையங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் கூட்டு நிலையங் களின் மொத்த எண்ணிக்கை 25 ஆகியது.

மீளாய்விற்குரிய ஆண்டுக் காலத்தில் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உத்தரவாதங்களை அளிப்பதன்மூலமும், ஏற்றுமதிக் கொடுகடனைக் காப்புறுதி செய்வதன்மூலமும் ஏற்றுமதியாளர்களுக்குத் தொடர்ந் தும் உதவியது. இவ்வுத்தரவாதங்கள் முன் கப்பற்படுத்தல், பின் கப்பற்படுத்தல், ஏற்றுமதிச் செயலாற்ற உத்தரவாதங்கள் ஆகிய மூன்று வகைகளையும் உள்ளடக்கி யிருந்தன.

உரிமக்கட்டுப்பாட்டில் செய்யப்பட்ட சில திருத்தங்களைத் தவிர 1984 இல் ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கையில் முக்கியமான மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இவற்றில் படகுக்கு வெளியே பொருத்தும் நீர்ப்பொறிகள் (25 குதிரைச் சக்திக்கு மேல்) புதுப்பிக்கப்பட்ட டயர்கள், காளான் கொல்லிகள், களை கொல்லிகள், கிருமி கொல்லிகள், குறிப்பிட்ட செயற்கை நார்கள் போன்றவற்றின் இறக்குமதி உரிமக்கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்ட வேளையில் சீனி, பேரீச்சம்பழம், பம்பாய் வெங்காயம் ஆகிய இறக்குமதிகள் தாராளமயப்படுத்தப்பட்டன.

இலங்கைத் தேயிலைச் சபையின் குறிப்பிட்ட சில நிருவாக ஒழுங்கு முறை களுக்கிணங்க ஏற்றுமதிக்காக மட்டும் கலத்தல், உறையிலடைத்தல், தேயிலைகளைப் பைகளிலிடல் ஆகியவற்றிற்கான தேயிலை இறக்குமதி இவ்வாண்டிலும் தாராள மாக்கப்பட்டிருந்தது.

மெக்சிக்கோ தவிர்ந்த அனைத்து நாடுகளுக்குமான கறுவாச்சுருள், பட்டைகளின் ஏற்றுமதி 1984 ஆம் ஆண்டிலும் தாராளமாக்கப்பட்டிருந்தது. அனைத்து முக்கிய ஏற்றுமதிப் பண்டங்களும் கட்டுப்பாடற்று விளங்கின. எனினும் சில ஏற்றுமதி விடயங்கள் தொடர்ந்தும் ஏற்றுமதிக்கு முந்திய தரப் பரிசோதனைக் குட்பட்டிருந்தன.

உயர்ந்த உற்பத்தி இலாபங்களை வழங்கல், முதலீட்டிற்கான ஊக்குவிப்பினை அதிகரித்தல் ஆகியவற்றின் நோக்கில் 1984 இன் ஏற்றுமதித் தீர்வைகள் திருத்தப்பட்டன. உற்பத்தியாளர் இலாபங்களையும் அதே போன்று ஏனைய உற்பத்தியாளர்களிடையே இலங்கைத் தேயிலை கூடியளவில் போட்டியிடுவதனையும் அதிகரிக்கும் பொருட்டுத் தேயிலை மீதான ஏற்றுமதித் தீர்வைகள் குறைக்கப்பட்டன. உயர்ந்த விலைகள் நிலவும் காலப்பகுதியில் ஏற்றுமதி வரிகளிலிருந்து சேகரிக்கப்படும் மேலதிக அரசிறையின் ஒரு பகுதியை ஈர்த்துக்கொள்ளவும் விலைகள் குறைவாக இருக்கும் காலப்பகுதியில் உற்பத்தியாளர்களுக்கு உதவியை வழங்கவும் அரச வரவுசெலவுத் திட்டத்தில் சமநிலைப்படுத்தும் நிதியமொன்றினை ஏற்படுத்துவதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

வீழ்ச்சியடைகின்ற பன்னாட்டு விலைகள் இறப்பர்க் கைத்தொழிலின் அதிகரிக்கின்ற உற்பத்திச் செலவுகள் ஆகியவற்றின் போக்கில் இறப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் குறைக்கப்பட்டன. இறப்பர் உற்பத்தியாளர்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்கும் பொருட்டுப் படிப்படியாக அதிகரித்துச் செல்லும் தீர்வைகளுக்கான கீழ்மட்ட விலைகள் ஆர். எஸ். எஸ். தரம் 1 இலிருந்து ஆர். எஸ். எஸ். தரம் 11 விலைகளுக்கு மாற்றப்பட்டன.

தெங்கு உற்பத்திகளுக்காகப் பன்னாட்டுச் சந்தை விலைகளின் மாற்றங்களுக்கேற்ப தானாகவே தீர்வைகளைச் சீராக்கிக்கொள்ளுமுகமாக அனைத்துத் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளினதும் ஏற்றுமதிகளின்மீது படிப்படியாக அதிகரித்துச் செல்லும் அளவினைக் கொண்ட தீர்வைகள் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தன. எனினும் உள்ளீட்டு உற்பத்திகளுக்கான வரியற்ற, பண்ணை விலை மெற்றிக் தொன்னொன்றுக்கு ரூ. 13,100 இலிருந்து 1984 நவெம்பரில் ரூ. 20,000 இற்கு உயர்த்தப்பட்ட வேளையில் தேங்காய் எண்ணெய்க்கான வரிவீதம் பண்ணை விலைக்கு மேலான மிகையில் 50 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டது. தேயிலையைப் போன்று தெங்கிற்கும் சமநிலைப்படுத்தும் நிதியொன்றை ஏற்படுத்துவது அரசினால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தேங்காய்த் துருவலுக்கான கீழ் மட்ட விலை இவ்வாண்டுக் காலத்தில் இரண்டு முறை மேல்நோக்கித் திருத்தப்பட்டவேளையில் தேங்காய் எண்ணெய் மீதான கீழ்மட்ட விலை 1984 திசம்பரில் அகற்றப்பட்டது.

தீர்வை அமைப்பின் விரிவான மீளாய்வொன்று குடியரசுத் தலைவரின் தீர்வை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்ட இறக்குமதித் தீர்வையின் திருத்தங்கள் உற்பத்திக்கு ஊக்குவிப்புக்கள் வழங்குவதிலும் உள்நாட்டுக் கைத்தொழிலுக்குப் போதியளவு பாதுகாப்பு வழங்குவதிலும் நோக்கமுள்ளதாக இருந்தன. அதன்படி இடைநிலைப் பொருட்களின் குறிப்பிட்ட விலை வகைகளின் மீதான (முக்கியமாக வளமாக்கி, சீமெந்து, கிளிங்கர், இரசாயனப் பொருட்கள்) இறக்குமதித் தீர்வைகள் முற்றாக நீக்கப்பட்ட வேளையில் முதலீட்டு, இடைநிலைப் பொருட்களின் ஏனைய வகைகளின் மீதான தீர்வைகள் (பொறிகள், உந்துவண்டிகள், இரும்பு, உருக்கு முதலியன) கணிசமானளவு குறைக்கப்பட்டன. மருந்துகள், குழந்தைப் பாலுணவு, அச்சடிக்கப்பட்ட புத்தகங்கள் போன்ற நுகர்வுப் பொருட்களின் மீதான தீர்வைகளும்

நீக்கப்பட்டன. உள்நாட்டுக் கைத்தொழிலுடன் போட்டியிடத்தக்க உற்பத்திகள் தொடர்பான (முழு ஆடைப் பால் மா, அரிசி, சீனி, நலத்துறைப் பொருட்கள் முதலிய) இறக்குமதிகள்மீது உயர்ந்த தீர்வைகள் விதந்துரைக்கப்பட்டன. குடியரசுத் தலைவரின் தீர்வை ஆணைக்குழுவின் விதந்துரைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 1984 நவெம்பரில் இறக்குமதித் தீர்வைகளின் சீராக்கப்பட்ட அமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

1981 இல் இறக்குமதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்ட மொத்த விற்பனவு வரி 1984 இலும் தொடர்ந்து தொழிற்பாட்டிலிருந்தது. வெளியீட்டின் 50 சத வீதத்தை அல்லது அதற்குக் கூடிய அளவை ஏற்றுமதி செய்யும் கைத்தொழில்களில் பயன்படுத்துவதற்கான பொறிகளின் இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனவு வரியின் நீக்கம் ஒரு முக்கிய மாற்றமாகும்.

இவ்வாண்டில் இலங்கை பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை, பன்னாட்டு கோப்பி உடன்படிக்கை ஆகியவற்றின் அங்கத்தவராகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் தேயிலை மீதான உடன்படிக்கைகளுக்கான பேச்சுவார்த்தையில் பங்குபற்றியது.

உள்நாட்டு வர்த்தகம்

முன்னைய ஆண்டில் பின்பற்றப்பட்ட உள்நாட்டு வர்த்தகக் கொள்கைக்கு இசைவாக விலைப்பொறிமுறையின் தொழிற்பாட்டில் பாதிப்பைத் தவிர்க்குமாறு சந்தைத் தலையீடு அதிகுறைந்தளவில் பேணப்பட்டது. உள்நாட்டு வர்த்தகக் கொள்கை நியாயமான விலைகளில் கிடைக்கத்தக்க அவசியத் தேவைகளை ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டது. எனும், சிலவகையான நிறுவன ஒழுங்குமுறைத் திட்டம் நீதியான போட்டியையும் ஏற்புடைய வர்த்தக நடைமுறைகளையும் பேணுவதற்காகத் தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இதன் பொருட்டு, உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் அதன் ஒழுங்குமுறை நடவடிக்கைகளை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம், நிறுத்தலளவை முகத்தலளவை கட்டளை சட்டம் போன்றவற்றினூடாகச்செயற்படுத்தியது.

மகாபொல வர்த்தகச் சந்தைகள் நுகர்வோர் அமைப்புகள் போன்றவற்றை ஒழுங்குசெய்வதன் மூலம் நுகர்வோரின் அறிவை அதிகரிப்பதற்காக நடவடிக்கையெடுக்கப்பட்டது. மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் 600 புதிய நுகர்வோர் அமைப்புகள் நிறுவப்பட்ட வேளையில் நாட்டில் வெவ்வேறு பகுதிகளிலும் 18 மகாபொல வர்த்தகச் சந்தைகள்நடாத்தப்பட்டன.

கோதுமை மா, பாண், மைசூர்ப்பருப்பு (சிவப்பு பருப்பு) 1984 இல் தொடர்ந்தும் விலைக்கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. தேசிய விலைகள் ஆணைக்குழு 1983 இல் 109 விலை மீளாய்வுகளுடன் ஒப்பிடும்போது 1984 இல் 76 விலை மீளாய்வுகளை மேற்கொண்டது. 1984 ஆம் ஆண்டில் தனியுரிமைகளைக் கட்டுப்படுத்தல், ஒன்றிணைப்புக்கள், போட்டிக்கு மாறான நடை முறைகள் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் பொறுப்புக்களை வழங்குவதன் மூலம் ஆணைக் குழுவின் அதிகார எல்லையைவிரிவுபடுத்துவதற்கான சட்ட அறிக்கையும் தயாரிக்கப்பட்டது.

அரசதுறை வர்த்தக நிறுவனங்கள் புதிய வர்த்தக சூழலில் வர்த்தக ரீதியில் ஆற்றலுடன் விளங்குவதற்காகத் தனியார் துறையினருடன் தொடர்ந்தும் போட்டியிட்டன. புதிய செயற்பாட்டு வழிமுறைகளில் ஈடுபட்டபோதிலும் தனி

யார் துறையிலிருந்தான போட்டி, நடவடிக்கை மட்டங்களைக் குறைவடையச் செய்ததை அரசதுறை வர்த்தக நிறுவனங்கள் உணர்ந்து கொண்டன. கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையமும் சந்தைப்படுத்தல் திணைக்களமும் நுகர்வோர் விலைகளின் உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கும் அத்தியாவசியப் பொருட்களின் கிடைத்தலையும் நீதியான வழங்கலையும் உறுதிப்படுத்துவதற்கும் தேவையான முக்கிய நிறுவனங்களாக விளங்கின. சிறப்பாக சந்தைப்படுத்தல் திணைக்களத்தின் மறுசீரமைப்பு காய்கறிகள் உட்பட நுகர்வோர் வடிவங்களின் விலைகளைக் குறைப்பதில் முக்கிய செல்வாக்கினைக் கொண்டிருந்தது. 1984 இல், நுகர்வோர் விலைகளைப் பேணுவதற்கு உதவுவதில் சந்தைப்படுத்தல் திணைக்களம் அதிகளவு ஆற்றல் மிக்க பங்கினை வகித்தது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினால் தொழிற்படுத்தப்பட்ட தாங்கிருப்பு, முக்கிய நுகர்வு விடயங்களின் கிடைத்தலைப் பேணுவதற்கும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைந்த மட்டத்தில் பேணுவதற்கும் உதவியளித்த காரணியாகும்.

உள்நாட்டு வர்த்தகத்தில் கூட்டுறவு நிலையங்களின் பங்கு அரிசி, சீனி, மா, உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ் நுகர்வுப் பொருட்கள் ஆகிய அடிப்படை உணவு வகைகளின் வழங்கலை உறுதிப்படுத்தும் முக்கியமானதொன்றாகத் தற்போது விளங்குகின்றது. அதனால் அவற்றின் இலாபங்கள் தொடர்ந்தும் குறைந்தளவாகக் காணப்பட்டது. எனினும், கூட்டுறவு நிலையங்களின் அதிகளவு முக்கியத்துவத்தினைப் பிரச்சினைகள் அல்லது உள்நாட்டுக் குழப்பங்களின்போது நாடு முழுவதிலும் அத்தியாவசியப் பொருட்களின் திறமையான வழங்கல் அவசர தேவையாக விளங்கிய வேளையில் கண்டுகொள்ளக் கூடியதாக இருந்தது. எனவே, உள்நாட்டு வர்த்தகக் கொள்கை நிதி அல்லது ஏனைய வசதிகளைக் கூட்டுறவு நிலையங்களுக்கு வழங்குவதன் மூலம் அவைகளை ஆற்றல்மிக்கவையாகத் தொடர்ந்தும் இயங்கச் செய்வதில் நோக்கங்கொண்டதாக விளங்க வேண்டும்.

### சுற்றுலா

1984 இல் சுற்றுலாத் தொழில் நடவடிக்கைகள் 1983 இல் காணப்பட்ட வீழ்ச்சியிலிருந்து ஓரளவுக்கு மீட்சியடைந்ததைக் காட்டின. சுற்றுலாப் பயணிகள் வருகை, சுற்றுலா இரவுகளின் எண்ணிக்கை, அறையில் தங்குதல், வருவாய்கள் போன்ற முதன்மை செயலாற்றக் குறிகாட்டிகள் இக்கைத்தொழிலின் நடவடிக்கைகள் 1982, 1983 மட்டங்களைவிட மிகவும் தாழ்ந்து காணப்பட்டபோதிலும் இக்கைத்தொழிலில் மீட்சி ஏற்படுவதைக் காட்டின. 1984 இன் இறுதியில் சுற்றுலாப் பயணிகள் வருகையில் அதிகரிப்பை ஏற்படுத்தியதன்மூலம் 1984 இல் சாதகமான போக்கிற்கு மேற்கு நாடுகளின் பொருளாதார மீட்சியும் உதவியது. எனினும், முக்கியமாகத் தீர்வையற்ற கடைகளில் பொருட்கள் வாங்குவதற்காக இந்திய உபகண்டத்திலிருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்திய அரசு அவர்களுக்கு வழங்கும் தீர்வையற்ற பொதிப் படிகளின் மீது கட்டுப்பாடுகளை விதித்ததனால் அதிகளவில் வீழ்ச்சியடைந்தது.

1984 இல் மொத்தச் சுற்றுலாப் பயணிகளின் வருகை 317,734 ஆக விளங்கி 1982 இன் மட்டத்தினைவிட 22 சதவீதம் குறைவாகவும் 1983 இன் மட்டத்தினைவிட 6 சதவீதம் குறைவாகவும் காணப்பட்டது. மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுத்திரலாசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1983 மட்டத்தினைவிட அதிகரிப்புக்களைக் காட்டின. இலங்கையின் முதன்மைச் சந்தையாக விளங்கும் மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1984 இல் 8 சதவீதத்தால் 191,070 இற்கு உயர்வடைந்தது.